# திரை மொழி


RNI No: TNTAM/2023/88599

THIRAI MOZHI TAMIL MONTHLY

தமிழ் மாத இதழ்

| திரை : 02 | மொழி : 07 | பிப்ரவரி - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
|---|---|---|---|---|
| Volume : 02 | Issue : 07 | February - 2025 | Page: 8 | Price: Rs. 10 |


# ஆவணப் படத்துக்கும் வியாபாரம் உண்டு!



## இயக்குநர் பிருந்தா சாரதி

தமிழ் புதுக்கவிதையில் புதிய பாய்ச்சலை நிகழ்த்திய கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் வாழ்வு மற்றும் இலக்கியப் பங்களிப்பு குறித்து இந்த ஆவணப்படம் விவரிக்கிறது.

அவர் காலத்திய கவிஞர்கள், அவரால் உருவான கவிஞர்கள், அவரது படைப்புகள் மூலம் இலக்கிய உலகத்திற்குள் நுழைந்த கவிஞர்கள் மற்றும் சமகால இலக்கிய ஆளுமைகள் ஆகியோர் கவிக்கோ குறித்துத் தங்கள் கருத்துக்களை இந்த ஆவணப்படத்தில் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மூத்த கவிஞர்கள் சிற்பி, ஈரோடு தமிழன்பன், மு.மேத்தா, கலாப்ரியா, இந்திரன் முதல் இளம் தலைமுறைக் கவிஞர்கள் மனுஷ்ய புத்திரன், இளங்கோ கிருஷ்ணன், கதிர்பாரதி வரை கவிக்கோ குறித்துத் தங்கள் கருத்துக்களையும் அவரோடான தங்கள் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழறிஞர்கள் ஔவை நடராசன், சாலமன் பாப்பையா ஆகியோர் தமிழ் இலக்கிய வெளியில் கவிக்கோவின் புலமையையும், கவிஞர்கள் வைரமுத்து, ஏர்வாடி ராதாகிருஷ்ணன், ஆரூர் தமிழ்நாடன் ஆகியோர் அவரோடு கலந்து கொண்ட கவியரங்க அனுபவங்களையும், தமிழ் கவியரங்கத்திற்குக் கவிக்கோ புகுத்திய புது ரத்த ஓட்டத்தையும் எடுத்துரைக் கிறார்கள்.

அவருடைய பிறப்பு முதல் மறைவு வரை அவரது வாழ்க்கை குறித்து அவரது குடும்பத்தினர், உறவினர்கள் தங்கள் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டிருப்பதும் இந்த ஆவணப் படத்தில் பதிவாகியுள்ளது.



தயாரிப்பாளர் சிங்கப்பூர் முஸ்தபா




**இந்த கவிக்கோ ஆவணப்படம் எல்லா பள்ளி, கல்லூரிகளிலும் திரையிடப்பட வேண்டும்**

இலக்கிய உலகைத் தாண்டி தத்துவம், கலை முதலான துறை களில் அவரது படைப்புகளின் பாய்ச்சலை அத்துறையை சார்ந்த ஆளுமைகள் இலங்கை ஜெயராஜ் ஓவியர் மருது ஆகியோர் தங்கள் பார்வை களை பதிவு செய்திருப்பது இதன் மற்றும் ஒரு சிறப்பு. சுகி சிவம், பர்வீன் சுல்தானா ஆகியோர் அவரோடான இலக்கிய மேடை அனுபவங்களைக் கூறியுள்ளனர்.


பக்கம் 6ல் தொடரும்





# தமிழ் சினிமாவின் முன்னோடிகள்

ஆத்தியாயம்-4
பாகம்-2

V.V.பிரசாத்
(டீ சினிமா ரிசோர்ஸ் சென்டரின் ஆவணக்காப்பாளர்)

*(டீ சினிமா ரிசோர்ஸ் சென்டர் (TCRC) ஒரு லாப நோக்கற்ற சினிமா ஆவண காப்பகம் ஆகும். இது இந்திய சினிமாவின், முக்கியமாக தென்னிந்தியாவின் பிராந்திய மொழிகளின் ஒலிஒளி சம்பந்தமான கலைபோருட்களின் ஆராய்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள சென்னை மாநகரத்தை அடிப்படியாக கொண்டு இயங்குகிறது. மேலும் தகவல் அறிய <https://tcrcindia.com/> இணையதளத்தின் மூலம் தொடர்பு கொள்ளவும்.)*

## 30களை அலங்கரித்த ராவ்கள் பாகம்-2

### B.N.ராவ்

B.N.ராவ் அவர்களின் பெயருக்கு பின்னாடி ஸ்வாரஸ்யமான கதை இருக்கிறது. தலசேரி, கேரளாவை சேர்ந்த அவருடைய இயற்பெயர் பாலகிருஷ்ணன் நாயர். கேரளாவில் பிறந்திருந்தாலும் மும்பை மாநகரத்தில் தந்தைக்கு வேலை கிடைத்ததால் அவருடைய குடும்பம் அங்கு குடியேறியது. அப்பொழுது அங்குள்ள பள்ளிக்கூடத்தில் பக்கத்துவிட்டுக்காரர் தென்னிந்தியாவிலிருந்து வரும் எல்லோருக்கும் ராவ் என்ற கடைசி பெயர் இருக்கும் என்று அனுமானித்து B.N.ராவ் என்று பதிவு செய்துவிட்டார். அந்த பெயரே அவருக்கு நிரந்தரம் ஆயிற்று.

B.N.ராவ் இயக்கிய முதல் படமான **துக்காராம்** பல விஷயங்களில் தனித்துவம் பெற்றது. பிரபல கர்நாடக சங்கீதத்தின் ஜாம்பவான் திரு முசிறி சுப்ரமணிய ஐயர் தலைப்பு பாத்திரத்தில் நடித்திருந்தார்.

துக்காராம் முசிறி அவர்களின் முதல் மற்றும் கடைசி படம் ஆகும். அவர் சினிமாவில் நடிக்க போகிறார் என்ற செய்தி இசை வல்லுனர்கள் மற்றும் ரசிகர்களிடையே பெரும் ஆச்சிரியத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது. முக்கியமாக அந்த கதாபாத்திரத்துக்கு மீசை வைக்கும் கட்டாயம் இருந்தது. இது அக்காலகட்டத்தில் தாடி மீசை மழித்து சுத்தமாக இருந்த இசை கலைஞர்களின் மரபுக்கு முரண்பாடானதாகும். அவருக்கு நடிக்க ஒட்டு மீசை கொடுத்திருந்தார்கள். அது அசௌகரியமாக இருந்ததால் முசிறி சற்று பொறுங்கள் என கூறி சில நாட்கள் கழித்து நிஜ மீசையுடன் வந்து நடித்து கொடுத்தார். படம் வெளிவந்தவுடன் முன்பு இருந்தது போலவே மீசையை மழித்து இசை கச்சேரி செய்ய தொடங்கி விட்டார்.




*Anandha Vikatan Deepavali Malar, 1938* வருட இதழில் வெளிவந்த துக்காராம் படத்திலிருந்துப் முசிறி சுப்ரமணிய ஐயரின் புகைப்படம்.

பட உபயம்: TCRC ஆவணக்காப்பகம்.

துக்காராமின் வெற்றிக்கு பிறகு சென்ட்ரல் ஸ்டுடியோவுடன் B.N.ராவிர்க்கான சம்பந்தம் வலுப்பெற்றது. தொடர்ந்து அவர் எடுத்த படங்கள் பெரும்பாலும் அவர்கள் தயாரிப்பில் வந்தது. அவற்றில் சில

*1939: பிரகலாதா*
*1939: ரம்பயின் காதல்*
*1940: பூலோக ரம்பை*

வியாபார ரீதியாக பிரகலாதா பெரிய வெற்றி பெறாவிட்டாலும் வேறு சில காரணங்களால் தமிழ் திரையுலக வரலாற்றில் முத்திரை பதித்தது என கூறலாம். அதில் ஒன்று திரு M.G. ராமசந்திரன் (MGR) அவர்கள் நடித்திருந்தது. இது அவர் அரம்பகாலங்களில் நடித்த படங்களில் ஒன்று, சரியாக சொன்னால் அவருடைய 6வது படம். படத்தில் அவருக்கும் கதாநாயகி M.R. சந்தானலக்ஷ்மிக்கும் இடையே நடக்கும் கத்தி சண்டைக்காட்சி பெரிதும் பேசப்பட்டது. தலைப்பு கதாபாத்திரத்தில் நடித்த T.R. மகாலிங்கம் பின்னாளில் பிரபல பாடகர் ஆனார்.




தினமணி வருஷமலர் 1939 இதழில் வெளிவந்த பிரகலாதா படத்தின் விளம்பரம்.
பட உபயம்: TCRC ஆவணக்காப்பகம்


### சுந்தர்ராவ் நட்கர்னி

மங்களூரில் பிறந்த சுந்தர்ராவ் நட்கர்னி தனது திரைப்பயணத்தை நடிகராக ஊமைபட காலகட்டதில் துவங்கினார். அவருடைய முதல் பயணம் 1925ம் ஆண்டு யூனியன் பிலிம் ஸ்டார் கம்பெனி தயாரிப்பில் N.D. சர்போத்தார் இயக்கிய சத்ரபஜீ சம்பாஜீ படத்தில் ஒரு சிறிய வேடத்தில் துவங்கியது. தொடர்ந்து சில படங்களில் நடித்த பின்னர் படத்தொகுப்பிலும் இயக்கத்திலும் ஈடுபட தொடங்கிவிட்டார். அவர் இயக்கிய முதல் தமிழ் பேசும் படம் சக்குபாய் 1934ம் ஆண்டு வெளி வந்தது. சுந்தரம் ஸ்டுடியோவுடன் தொடர்பு ஏற்பட்டு படங்கள் எடுக்க ஆரம்பித்தார்.

1930களில் அவர் இயக்கி வெளிவந்த மேலும் சில திரைப்படங்கள்:

- *1937: ராஜ பக்தி*
- *1937: பஸ்மாசூர மோகினி*
- *1938: மண்டோதரி பரிணயம் அல்லது பூ கைலாஸ்*
- *1939: சாந்த சக்குபாய்*

சுந்தரம் சவுண்ட் ஸ்டுடியோ லிமிடெட் சென்னை தயாரித்த மண்டோதரி பரிணயம் அல்லது பூ கைலாஸ் திரைப்படம் 1938ம் ஆண்டு வெளி வந்தது. பெரும் வெற்றியும் பெற்றது. துரதிருஷ்டவசமாக இப்படத்தின் பிரதிகள் எங்கும் இல்லை. சிலர் தெலுங்கில் மறு ஆக்கம் செய்து இதே பெயருடன் 1940ம் ஆண்டு வெளிவந்த படத்துடன் இப்படத்தை தவறாக புரிந்துகொள்வர். நட்கர்னி தான் அதனையும் இயக்கினார். இரண்டு தமிழ் படங்களான அல்லி அர்ஜுனா மற்றும் நந்தகுமாரில் ஏற்ப்பட்ட பெரும் நஷ்டத்துக்கு பிறகு A.V. மெய்யப்ப செட்டியார் (AVM) இப்படத்தின் (தமிழ் பூ கைலாஸ்) மேல் ஈர்க்கப்பட்டு நம்பிக்கையோடு தெலுங்கில் தயாரித்தார். இப்படம் மிக பெரிய வெற்றி பெற்று தந்தது. AVMன் வியாபாரம் மீண்டும் புத்துயிர் பெற உதவிற்று என கூறலாம். AVM பற்றி விரிவாக பின்வரும் ஒரு அத்தியாயத்தில் பேசுவோம்.




CINE ART REVIEW 1937 ஆங்கில ஆண்டு மலரில் வெளிவந்த பூ கைலாஸ் படத்தின் விளம்பரம்.
பட உபயம்: TCRC ஆவணக்காப்பகம்


சுந்தர்ராவின் இயக்கத்தில் ராயல் டாக்கீ டிஸ்டிரிபியூடர்ஸ் தயாரித்த சாந்த சக்குபாய் 1939ம் ஆண்டு வெளிவந்தது. தலைப்பு கதாப்பாத்திரத்தில் கே. அஸ்வத்தம்மா நடித்திருந்தார். மற்றொரு முன்னணி கதாப்பாத்திரமான சக்குபாய் கணவன் வேடத்தில் கே. சாரங்கபாணியும் அவரது தாயாக ஸி. பணியும் நடித்திருந்தனர். பணிபாய்க்கு முதல் படம் என்றாலும் அவருடைய நடிப்பு நல்ல வரவேற்ப்பு பெற்றது.




ஆனந்த விகடன் தீபாவளி மலர் 1939ல் வெளிவந்த சாந்த சக்குபாய் படத்தின் விளம்பரம்.
பட உபயம்: TCRC ஆவணக்காப்பகம்

இப்படத்தில் நடந்த முக்கியமான மற்றொரு நிகழ்வு ஏ.ஏ. சோமாயாஜுலுவுடன் இணைந்து முதல் முறையாக வசனம் எழுதி சிறு வேடத்தில் நடித்த தமிழ் சினிமாவின் ஜாம்பவான் கொத்தமங்கலம் சுப்பு. பன்முகதன்மையுடைய சுப்பு பின்னாளில் தமிழ் சினிமா துறையின் மிக பிரபலமானவர்களில் ஒருவராக திகழ்ந்தார். S.S. வாசனுடன் இணைந்து பல வெற்றி படங்களை குடுத்தார். இவரை பற்றியும் வேறு ஒரு அத்தியாயத்தில் விரிவாக பேசுவோம்.

தொடரும்...



# காதல் சக்தியும், தேசப்பக்தியும் ‘தண்டேல்’

கதாநாயகன் நாகசைதன்யாவின் உணர்ச்சிமிக்க நடிப்பும், சாய்பல்லவியின் எதார்த்தமான நடிப்பும் ரசிகர்களின் மனதைத் தொட்டு, ‘தண்டேல்’ படத்தை ரசித்துப் பார்க்க வைக்கிறது. கடல் அலைகள் நம்மைத் தொட்டு விட்டு திரும்ப கடலுக்குள் சென்று மீண்டும் கரையில் நிற்கும் கால்களைத் தொடும்போது ஏற்படும் மகிழ்ச்சியும், சந்தோஷமும், ஒவ்வொரு காதல் காட்சியிலும் நமக்கும் ஏற்படுகிறது.

கடலோர மக்களின் வாழ்வாதாரம் எதை நம்பியுள்ளது. எவ்வளவு கடினமானது. என்பதை பல காட்சிகளில் உணர முடிகிறது. கடலோடிகளுடைய கடின வாழ்க்கையிலும் அவர்கள் ஒருவருக் கொருவர், அன்போடும், ஒற்றுமை யோடும், வாழ்வது அனைவருக்கும் பாடம்.

அன்பும், பாசமும் கலந்த காதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருந்தாலும், திரைக்கதை வசனத்தில் நமது இந்தியத் திருநாட்டின் மேலுள்ள மரியாதையும், தேசபக்தியும் எவ்வளவு முக்கியம் என்பதை இந்த தலைமுறை இளைஞர்களுக்கு பதிவு செய்துள்ளார்கள்.

கடற்கரையின் அழகு, நடுக்கடலில் புயல், பாகிஸ்தான் சிறைச்சாலைக் காட்சிகள் மிகவும் அருமையாக ஒளிப்பதிவாளரால் பதிவு செய்யப் பட்டுள்ளது. சாய்பல்லவி கடலோரம் ஆடும் நடனக் காட்சியிலும், சிவபூஜை நடனக் காட்சியிலும் இளைய நாட்டியத் தாரகை என்பதை நிரூபிக்கிறார்.

மொத்தத்தில் ‘தண்டேல்’ திரைப்படம் பார்க்கும்போது ஒரு தெலுங்கு மொழி மாற்றுப் படத்தைப் பார்க்கிறோம் என்ற உணர்வே ஏற்படாத வகையில், நேரடித் தமிழ் திரைப்படத்தைப் பார்க்கும் உணர்வை ஒவ்வொரு காட்சியின் வசனங்களும் ஏற்படுத்துகிறது. இயக்குநர் சந்து மொன்டேட்டியின் அற்புதமான திரைக்கதை இயக்கமும், V.பிரபாகர் எழுதியுள்ள ஆணி அடித்தது போன்ற ஆழமான வசனங்களும் ரசிகர்களை இருக்கைகளில் கட்டிப்போட்டு, ரசிக்க வைக்கிறது. தற்போதுள்ள டிரண்டில் இளமை துள்ளும் உரையாடல்களை எழுதியதால், பல இடங்களில் திரையரங்கில் வசனங்களுக்கு கைதட்டல் கிடைக்கிறது. தேவி ஸ்ரீபிரசாத் பின்னணி இசையும் விவேகாவின் பாடல் வரிகளும் படத்திற்கு பலம் சேர்க்கிறது. நான் ரசித்த வசனங்களில் சில துளிகள்.



**விமர்சகர் -லயன் சி.எஸ்.பாலமுருகன்**
கல்வியாளர் மற்றும் பயிற்சியாளர்
முன்னாள் அமைச்சரவை செயலாளர்
**லயன்ஸ் இன்டர்நேஷனல்**
**மாவட்டம் 324 M**

1. சிறுவயது கதாநாயகனிடம் அறிவுரையாக அப்பா பேசும் வசனம்., "கூட்டாளிங்க ஆபத்துல இருக்கும்போது துணிஞ்சி முதல் அடி எடுத்து வக்கறவனும், அந்தக் கூட்டாளிங்கள காப்பாத்தி கரைக்கு கூட்டிட்டு வரும்போது கடைசி அடி எடுத்துவக் கறவன்தான், "தண்டேல்"!
3. சாய்பல்லவி டெல்லியில் பன்சூரி சுவராஜ் மேடம் உடன் பேசும்போது.. "தேசத்துக்கு எல்லை இருக்கு ஆனா எங்க துரதிஷ்டத்துக்கு எல்லை இல்ல மேடம்"
4. திரைப்படம் நிறைவடையும்போது, கதாயகனும், கதாநாயகியும் நெருக்கமாகப் பேசும் கிண்டலாக நாயகனிடம்.. “பத்தினி பாயாசம் வச்சாளாம் பத்து நாளாயிம் கெட்டுப் போகலயாம்”என்று சொல்லும் போது தியேட்டர் கலகலப்பாகிறது..


## திரை மொழி

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
கௌரவ ஆசிரியர்கள் : குரு ரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : ஸ்ரீராம் பத்மநாபன், V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்

தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766



ஆரா DEVOTIONAL

அறம் தமிழ்
தமிழ் அகம் ஒரு நடுநிலை ஊடகம்
தொடர்புக்கு : 9467 208 208







# ஒரு ஊர்ல... ராஜாவாம்...

**என் குமார்** (இயக்குநர், எழுத்தாளர்)
9445022623 nkumarukku@gmail.com

அந்த மேற்கு மலைல இருந்து மூங்கில்களைக் கட்டிக்கிட்டு ஆட்கள் அந்த வழியாப் போவாங்க. மூங்கிலை விடச் சின்னதா இருக்கறதுக்கு ஈத்தைன்னு பேரு. எந்த வீட்டுக்கு அது கூரையாவோ, தட்டி போடவோ போகுமோ... அதைப் பார்த்து, எஞ்சியிருக்கிற ஈத்தையை எடுத்துட்டு வந்து, கணுவோட பல பகுதியா வெட்டி, நெருப்புல சின்ன இரும்புக் கம்பியைப் பழுக்கக் காய்ச்சி அந்த ஈத்தையில தெரிஞ்சவரை இடைவெளி விட்டு... ஓட்டை ஓட்டையாப் போட்டு... அதை எடுத்துக்கிட்டு, தனியா காட்டுப் பக்கமும், ஓடைப் பக்கமும், தோப்புப் பக்கமும் போய்.... ஊதி... ஊதி... அதை வாசிச்ச அந்தச் சின்னப் பையனுக்கு அப்போ தெரியாது, அந்த ராஜ புல்லாங் குழலுக்கு இந்த உலகமே மயங்கப் போகுதுன்னு!

அதுவும் அவ்வளவு இலேசாவா நடந்தது? கஷ்டப்படாம நடக்குமா காரியம்? அதையே அந்த ராஜாவோட வார்த்தைல சொல்லணும்னா... 'ஓட்டையின்றிப் புல்லாங்குழல் உண்டோ?'

...

கனவு கனவு கனவு. எதிர்காலம் என்னன்னு தெரியாதபடி ஒவ்வொரு நாளும் விடியுதேன்னு மனசு கலங்கிப்போன பருவம்... இராத்திரி அந்த சின்னத்தாயியைக் கட்டிப் பிடிச்சுத் தூங்கும்போதுகூட அவளோட விலா எலும்பும் இடை வெளியும் ஹார்மோனியமா மாறி, தூக்கத்துல கை வாசிக்கும். கவனிச்ச அம்மா கலங்கிப்போனா. இருட்டுல அந்த முகத்தைப் பார்த்தா. 'இது தரைல கிடக்கவேண்டிய சித்தெறும்பு இல்ல... உச்சத்துல பறக்க வேண்டிய ராஜாளி.'



...

அன்னைக்கு ஒரு நாள், அணைக்கட்டு வேலைக்குப் போயிட்டு வந்துக்கிட்டிருந்த அந்தப் பையனை தூரத்துல இருந்து ஒரு பாட்டு தேடி வந்து கட்டிப்பிடிச்சுது. 'மாலைப் பொழுதின் மயக்கத்திலே... நான் கனவு கண்டேன்...' னு..! அந்த மெல்லிசை, உள்ளே ஏதோ பண்ணுச்சு.

'இளமையெல்லாம் வெறும் கனவு மயம். இதில் மறைந்தது சில காலம். தெளிவுமறியாது முடிவும் தெரியாது மயங்குது எதிர்காலம்...' னு வரிகளைக் கேட்டதும் பொல பொலன்னு அந்தப் பையன் கண்ணுல தண்ணி கொட்டுது. நின்ன இடத்துல நின்னு அப்படியொரு அழுகை. இப்போ தான் தெரியுது... நின்ன இடத்துலயே நிக்கறோம்னு! அந்தக் கணமே கால் இரண்டும் அந்தப் பண்ணைப்புரத்தைவிட்டுக் கிளம்ப நினைக்குது.

இருக்கறதையெல்லாம் வித்து, அம்மா கொடுத்ததை மொத்தமா எடுத்துக்கிட்டு ("உனக்குன்னு கொஞ்சம் கைல வெச்சுக்கோம்மா" ன்னு கூட வாஞ்சையா சொல்லத் தெரியாத வெள்ளந்தி மனசோட...) அந்தப் பையன் கிளம்பினான்.

...

அதுக்கப்புறம் இங்கே நடந்ததெல்லாம் பிரபஞ்சம் எழுதின ராஜ அத்தியாயங்கள்!

...

ஓடி வந்த உழைப்புக்குப் பரிசா பெரிய அரியாசனத்தைக் கொடுத்த காலம், உட்காரக் கூட நேரம் கொடுக்காம... இன்னும் உழைக்க வெச்சு... இன்னும் இன்னும் ஓட வெச்சு மத்தவங்க களைப்பைப் போக்கிச்சு.

வந்த இடத்துல அந்த ராஜா கஷ்டப்பட்டதுண்டு. ஆனா, ஒரு நாளும் வருத்தப்பட்டதில்ல... பட்டதெல்லாம் பாட்டாச்சு.

அவர் ட்யூனுக்கேத்த மாதிரி, இங்கே இருக்கற எல்லார் இதயத்தையும் ட்யூன் பண்ணி வெச்சிருந்தது, இயற்கை. அதுதான் உண்மை!

அது காத்துல கலந்து காதுல விழுந்ததும் என்ன ஆச்சுன்னே தெரியல... சிலர் அழறாங்க... சிலர் குதிக்கறாங்க... சிலர் எதுவும் பேசாம கண்மூடிக்கறாங்க... சிலர் உற்சாகப்படறாங்க... சிலர் ஆராய்ச்சி பண்றாங்க... சிலர், 'இந்தப் பிறவிக்கு இது மட்டும் போதும்'னு நெஞ்செல்லாம் நிரப்பிக்கறாங்க... சிலர், கூடவே எடுத்துக்கிட்டுப் போறாங்க... சிலர் சந்தோஷத்துல அவரை ஒருமைல திட்டறாங்க... எல்லாரும், ஒரு முறையாவது அவரைப் பார்க்கணும்னு... பக்கத்துல இல்ல... தூரத்துலயாவது பார்க்கணும்னு துடிக்கறாங்க...

ஒரு அஞ்சு நிமிஷப் பாட்டுல ஆகாயத்தைத் தரைல இறக்கிவெச்சு.... தரைல இருக்கறவனை ஆகாயத்துல மிதக்க வெச்சு... என்ன இது? எப்படி இது சாத்தியம்? சத்தியமா அதைச் செஞ்சவருக்கே பதில் தெரியலயே!

...

காலை 6.50 க்கு ஒலிப்பதிவு கூடம் நுழையற அந்த ராஜா... இரவு வரை... ஆர்ப்பாட்டம், ஆரவாரம், அரட்டை, வீண் பேச்சு, வேண்டாத சத்தம், கெடுக்கற பழக்கம்னு எதுகூடவும் சகவாசம் வெச்சுக்காம வியாபாரச் சந்தை பத்திக்கூட எந்தச் சிந்தையும் இல்லாம இசை வசமானதால தானே இந்த மரியாதை கிடைச்சது! ('திரையுலகம் என்னும் திறந்த பேருந்தில் கரம் சிரம் புறம் நீட்டாத வன்' - அவர் கூடப் பயணிச்ச கவிஞர் சிலாகிச்சது!)

...

தலைல அருவியாப் பிரவாகமா வர்ற இசையை, வந்த வேகத்துல... அந்த அஞ்சு வரித்தாள்ல... வரி வரியா உருவமா எழுதறது... இரண்டு மணி நேரப் படத்துக்கு இசைக்கோர்ப்பால உயிர் கொடுக்கறது... சம்பளத்துக்குப் பார்க்கற வேலையா? வேள்வி!

...

பேருந்துல, கல்யாண வீட்டுல, கட்டில்ல, தொட்டில்ல, ஊர் திருவிழாவுல, விடிஞ்சா, பொழுது முடிஞ்சா... இரவெல்லாம்... எங்கே கேட்டாலும்... ராஜா!



சுவரொட்டிகள்ல, அத்தனை அடி கட் அவுட்ல, ஊர் ஊராத் தெரு ஓவியத்துல... கடை விளம்பரப் பலகைகள்ல... குழந்தைகளுக்கு வைக்கற பேர்ல... எங்கே பார்த்தாலும் ராஜா!

சொல்லமுடியாத ரணத்தையெல்லாம் குணமாக்கினவருக்கு... மனசெல்லாம் இசையா இடம் பிடிச்சவருக்கு மனுஷங்க வேற எப்படி நன்றி சொல்லமுடியும்?

...

சின்ன வயசுல, அண்ணன்கூடப் போற இடமெல்லாம், முக்கியமா திருச்சி திருவெறும்பூர்ல கச்சேரி முடிக்கும்போது, ஒட்டுமொத்தக் கூட்டமும் நிறுத்தாம கைத்தட்டுச்சு.

அன்னைக்கு இராத்திரி புரண்டு புரண்டு படுக்குது உடம்பு. "கைத்தட்டல் சத்தம் கேட்டுத் தூக்கம் கெட்டுப்போச்சு" ன்னு அந்த நிகழ்ச்சியைச் சொன்ன ராஜாவுக்கு பின்னாளில பாதையெல்லாம் கைத்தட்டல்.

ஆனாலும், அந்த மூகாம்பிகை ஊர்ல அந்தத் தீர்த்தக் குளத்துல குளிச்சு எழுந்ததும்... நடை, உடை, பாவனை மாறிச்சு!

பட்டு... பகட்டு... பட்டம்... பாராட்டு... விருந்து... விருது... தங்கம்...



எதுவும் பிடிக்கலை. விரலுக்குத் தங்க மோதிரம் எதுக்கு? அங்கமா மாறிப்போனஹார்மோனியம் இருக்கே!

அதுல, ஆயிரமாயிரம் மெட்டுப் போட்ட ராக வாழ்க்கை! ஆயிரம் பேருக்கு முகவரி கொடுத்த ராஜ வாழ்க்கை!

விண்ணளவு புகழ் வந்தும் அதிகாலையே எழுந்து இசையைக் கத்துக்க குருமார்களோட வீட்டுக்கே போய் நின்னாரு. தான் ஒண்ணுமில்ல; தனக்கு மேல ஒண்ணு இருக்குன்னு தெரிஞ்சிக்கிட்ட ஞானம். ஊரே, ராஜா ராஜான்னு தூக்கி வெச்சாலும், பெத்தவங்க வெச்ச பேர், ‘ஞான தேசிகன்’. அதுக்கு அர்த்தம் போலத் தான் இருக்கு, ராஜா நடக்கற பாதை.

...

ஆயிரத்து ஐநூத்துக்கும் மேல படத்துக்கு இசையமைப்பாளர்னு திரையில ராஜா பேர் இருக்கும்!

திருவரங்கம், திருவண்ணாமலை ராஜ கோபுரத் திருப்பணிக் கல்வெட்டுலயும் ராஜா பேர் இருக்கும்!

நினைச்சபோதெல்லாம் ராஜா மனசு, ரமணாஸ்ரமத்துல போய் இருக்கும். அந்த மாடி அறை முழுக்க அவரோட ரமணஸ்மரணமா இருக்கும்!

மௌனத்துல இருந்த காஞ்சி மகானுக்கு, ஒரு புண்ணிய நதி தீரத்துல நிலா வெளிச்சத்துல, பாடற பாக்கியம் ராஜாவுக்குத் தானே கிடைக்கும்!

உலகமே நாடிப் போய் ஆசி வாங்கின பொதுவா எங்கேயும் போகாத, யார்கிட்டயும் பேசாத பெண் சித்தர் மாயம்மா... கன்னியாகுமரில இருந்து கிளம்பி, தன் வீட்டுக்கே வந்து உட்கார்ந்த அதிசயம்லாம் ராஜாவுக்குத் தானே நடக்கும்!

...

கர்ப்பத்துல சங்கடத்துல இருந்த குழந்தை உயிர் பிழைக்க, ராஜாவோட திருவாசகம் காரணமா இருந்தது கூடச் சாதாரணம்.

ஆனா, யாருக்கும் அடங்காம பதற்றமா இருந்த மதம் பிடிச்ச கேரள யானை, ராஜாவோட ‘அல்லி இளம் பூவோ... இல்லி முளம் தேனோ’ பாட்டை பாகன் பாடித் தடவிக்கொடுத்ததும்... அடங்கித் தூங்குதே... ஒரு குழந்தை மாதிரி... எப்படி?

...

சினிமா - கொட்டகைல, ‘ராசாத்தி உன்னெ... காணாத நெஞ்சு’ பாட்டு ஒலிக்கிற நேரத்துல மட்டும் மொத்தமா யானைகள் கூடி வந்து முழுசாக் கேட்டிட்டு, பாட்டு முடிஞ்சதும் தானாத் திரும்பிப்போனதே... எப்படி?

யானையோட இசை தாகத்தைக் கூட தீர்த்து வைக்கத் தெரிஞ்ச ராஜா... காசுக்கா... பேருக்கா... ஆசைக்கா வாசிச்சிருப்பாரு?

...

எப்பவும் சினிமா பாட்டுக்குத் தானே எழுதிக்கிட்டிருப்பாரு அந்த ராஜான்னு, நினைச்சு கொஞ்சம் எட்டிப் பார்த்தா... அந்த வெள்ளைத் தாள்ல வெண்பா ஒண்ணு கொட்டிக் கிடக்கும்.

‘அண்ட புவனம் அலையில்
குமிழ்போலும்
மண்டல மாந்தர் குமிழில்
நுரைபோலும்
எண்ண நிலையாதே எப்பொருளும்
ஈதாகா
வண்ணம் வளைகொம்பன் காப்பு.’

பாட்டிசைக்கிற ராஜாவாப் பார்த்த ஊரு... அவர் கவிதை, கட்டுரை, இலக்கியம், பக்தி எழுதினதையும் பார்க்கணுமே.... ஒண்ணா, ரெண்டா...?

‘வெட்டவெளிதனில் கொட்டிக் கிடக்குது’ ... காலம் அவர் கைப்பிடிச்சு எழுத வெச்ச தலைப்பு.


...

ஒரு நாள் ஒரு பெரியவர், ராஜாவைப் பார்க்கும்போது, அவரைப் பத்தி பொதுவா... பொத்தாம் பொதுவா... யார் யாரோ வைக்கற விமர்சனத்தையெல்லாம், அவர் கிட்டயே கேட்டாத்தான் மனசு ஆறும்னு... நேர்ல போய் நின்னாரு.

“சிலர் இப்படில்லாம் பேசறாங்களே... ஏதாவது ‘நறுக்’னு பதில் சொல்லிடுங்களேன்!”ன்னு ராஜா மேல இருந்த பாச ஆதங்கத்துல கேட்டாரு.

எல்லாத்தையும் கேட்ட ராஜா அத்தனைக்கும் பதிலா ஒரு சிரிப்பை மட்டும் உதிர்த்திட்டு, எதிர்ல இருந்த ஹார்மோனியம் கிட்ட இன்னும் நெருக்கமா உட்கார்ந்தாரு.

இடது கை விரல்கள் அந்த



விசிறியை மெதுவா அசைக்க... வலது கை விரல்கள் கட்டைகள்ல இங்கேயும் அங்கேயும் நகர... அவரோட சன்னமான குரல் உதிச்சது... அங்கே ஒரு புது மென்மெட்டு பூக்க ஆரம்பிச்சது. அறை முழுக்க நாத வாசனை!

கண்மூடித் தன்னை மறந்து இசைக்க ஆரம்பிச்சஅந்த ராஜாவைத் தொந்தரவு பண்ண விரும்பாத பெரியவர் மெதுவா... கிளம்பிட்டாரு.

...

வீட்டுக்குப் போனதும் எல்லாரும் அந்தப் பெரியவரைச் சுத்தி நின்னு, “ராஜாவைப் பார்த்தீங்களா? பேசினீங்களா? எப்படி இருந்தது அங்கே? கேள்வியெல்லாம் கேட்டீங்களா? என்ன சொன்னாரு?” ன்னு கேட்டதுக்கு அந்தப் பெரியவர், குமரகுருபரர் எழுதின நீதி நெறி விளக்கம் பாட்டை மட்டும் சொன்னாரு...


“மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார்
கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்
செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்புங்
கொள்ளார்
கருமமே கண்ணாயினார்”

★




1-ம் பக்கத் தொடர்ச்சி

# ஆவணப் படத்திற்கும் வியாபாரம் உண்டு


தாஜ்நூர்


சி. ஜே. ராஜ்குமார்


நாடன் சூர்யா

## தமிழில் ஹைக்கூ, கஸல், சூஃபி கவிதை

பல புதிய கவிதை வடிவங்களை அறிமுகப்படுத்திப் பரப்பியவர் கவிக்கோ என்பதை பாவலர் அறிவுமதி, இயக்குனர் மற்றும் ஹைக்கூ கவிஞர் இயக்குநர் லிங்குசாமி, கஸல் கவிஞர் ஜின்னா ஆஸ்மி, முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன் ஆகியோர் உதாரணக் கவிதைகளுடன் கூறி இருக்கிறார்கள்.

அதேபோல கவிக்கோ கவிதைகளை அரபியில் மொழிபெயர்த்த பேராசிரியர் ஜாகிர் உசேன், உருதுவில் மொழிபெயர்த்த ஃபைஸ் ஹைதிரி ஆகியோரின் பேட்டியும் ஆவணப்படத்தில் பதிவாகி உள்ளது.

கவிக்கோ இல்லாதபோது எடுக்கப்பட்ட இந்த ஆவணப் படத்தில் கவிக்கோ இல்லையே என்ற குறை தெரியாதவாறு அவருடைய பழைய ஆவணங்களில் இருந்தும் அவர் குடியிருந்த வீடுகள், அவர் பயன்படுத்திய பொருட்கள், அவர் படித்த மதுரை தியாகராசக் கல்லூரி, அவர் பணியாற்றிய வாணியம்பாடி கல்லூரி என பலவற்றைப் படம் பிடித்து காட்டி ஆவணப்படத்தைத் திரைப்படம் பார்க்கும் அனுபவமாக மாற்றியிருக்கிறார் இயக்குனர் பிருந்தா சாரதி.

இயக்குனரே ஒரு கவிஞராக இருப்பதால் ஆவணப் படத்தை கவித்துவத்தோடு இயக்கி இருக்கிறார். கவிக்கோவின் கவிதைகள் ஆவணப் படம் நெடுகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

கவிக்கோவின் இளமைப் பருவத்தில் அவருக்குள் கவிதை எப்படிப் புகுந்தது என்பது முதல் ஒரு பேராசிரியராக, தமிழறிஞராக, ஆய்வாளராக, பெரும் படைப்புகளைத் தமிழுக்கு வழங்கிய கவிஞராக புதுப் புதுக் கவிதை வடிவங்களைத் தமிழுக்குக் கொண்டு வந்து பரப்பிய இலக்கியத் தூதராக செயல்பட்டார் என்பதை சான்றுகளுடன் எடுத்துரைத்து, எப்படி ஒரு தவிர்க்க முடியாத ஆளுமையாக உருவானார் என்பதை இந்த ஆவணப் படம் ஆய்வு ரீதியாக நிறுவுகிறது.

கவிக்கோவின் அரசியல் கண்ணோட்டம், திராவிட இயக்க சார்பு நிலை கொண்டிருந்தபோதும் இறைப் பற்றாளராக அவர் உறுதியோடு இருந்தது, இறை நம்பிக்கை கொண்டிருந்தபோதும் பிற மதங்களிடம் கொண்டிருந்த சமய நல்லிணக்கம், உலகெங்கும் இருக்கின்ற கவிஞர்களைத் தமிழுக்குக் கொண்டு வந்து தமிழ்க் கவிதையை உலக தரத்துக்கு உயர்த்த வேண்டும் என்ற அவருடைய வேட்கை என்று பல்வேறு பரிமாணங்களில் கவிக்கோவின் உள்ளும் புறமும் பயணித்து அப்துல் ரகுமான் என்ற கவிஞர் ஏன் கவிக்கோ என்று கொண்டாடப்படுகிறார் என்ற கேள்விக்கு விடையளிக்கிறது. 80 வயது வரை ஓய்வின்றி உழைத்த ஒரு பெரும் கவிஞரின் வாழ்வையும் பணியையும் ஒரு மணி நேரத்தில் இந்த ஆவணப்படம் முழுமையாக நமக்குள் புகுத்திவிடுவது ஒரு வியப்பான அனுபவம் என்றே கூறலாம்.

நீண்ட காலத்திற்குப் பிறகு தமிழ் கவிதைக்கான சாகித்திய அகாடமி விருது முதல், உலகெங்கும் அப்துல் ரகுமான் பெற்ற விருதுகள், பாராட்டுகள் ஆகியவற்றையும் கவிக்கோ பேரில் வழங்கப்படும் விருதுகள் பற்றியும் இதில் சொல்லப்பட்டுள்ளன.

படத்தில் ஒளிப்பதிவு சி. ஜே. ராஜ்குமார், இசை தாஜ்நூர், படத்தொகுப்பு நாடன் சூர்யா ஆகியோர்கள் ஆவணப் படத்திற்குக் கூடுதல் சிறப்பை வழங்கியிருக்கிறார்கள்.

தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு தொடர்ச்சி இருப்பது இந்த ஆவணப்படத்தில் குறிப்பிடத்தகுந்த அம்சம் ஆகும். ஒருவர் பேசுவதிலிருந்து அடுத்தவர் தன்னுடைய பேச்சைத் தொடங்குகிறார். அது ஒரு திரைப்படம் பார்ப்பதுபோல அடுத்து என்ன அடுத்து என்ன என்று வேகமாக நகர்ந்து செல்கிறது. திரைப்படங்களுக்குத் திரைக்கதை எழுதிய பயிற்சி இருப்பதன் காரணமாக இந்த ஆவணப் படத்தை திரைப்படம் போன்ற சுவாரசியத்தோடு எழுதி இயக்கியிருக்கிறார் பிருந்தா சாரதி.

அதேபோல சர்ரிலிசம், ஹைக்கூ, கஸல் போன்ற இலக்கிய உத்திகள், பாணிகள் கவிதைகள் வரும் போதெல்லாம் காட்சி படிமங்களில் கவிதையாகவே வரைந்திருக்கிறார்.

கவிக்கோவின் இளமைப் பருவத்தைப் படம் பிடித்து இருப்பது, அவருடைய முன்னோர்கள் பற்றிய செய்திகளைக் கூறுவது ஆகிய இடங்களில் எல்லாம் திரைப் படமாகவே படம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கவிக்கோ உடன் நெருங்கி பழகிய அனைவரிடமும் கருத்து கேட்டுப் பதிவு செய்திருக்கிறார் .

தன் வாழ்வு முழுக்க கவிதையாகவே, கவிதைக்காகவே வாழ்ந்த கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களைப் பற்றிய முழுமையான தோற்றத்தை இந்த ஆவணப்படம் வழங்குகிறது என்று சொன்னால் மிகை இல்லை. இயக்குனர் பிருந்தா சாரதியின் பின்னணிக் குரல் தடையின்றிக் காட்சிகளை நகர்த்திச் செல்கிறது.

கவிக்கோ மன்றம் அமைத்து கவிக்கோவுக்குப் பெருமை சேர்த்த சிங்கப்பூர் முஸ்தபா இந்த ஆவணப்படத்தைத் தயாரித்துக் கவிக்கோவுக்கு மற்றும் ஒரு புகழ் மகுடம் சூட்டி இருக்கிறார்.

கலந்துரையாடலில்...

கேள்வி- ஆவணப்படத்திற்கு வியாபாரம் உண்டா?

இயக்குநரின் பதில் - இந்த கவிக்கோ ஆவணப் படத்தை வியாபாரத்திற்காக எடுக்கவில்லை. ஆனால், இப்போது ஆவணப்படத்திற்கு நல்ல வியாபார தளங்கள் அமைந் திருக்கிறது. **சோலே** படத்திற்கு கதை வசனம் எழுதிய சலிம், சாவித் பற்றிய ஆவணப் படம் ஓடிடியில் நிறைய ரசிகர்கள் பார்த்து திரைப்படத்திற்கு நிகராக நல்ல வசூல் செய்து கொண்டிருக்கிறது. நேர்த்தியாக எடுக்கப்படும் ஆவணப் படங்களுக்கு வியாபாரம் உண்டு.

கேள்வி- எத்தனை நாள் சூட்டிங் செய்தீர்கள்?

இயக்குநரின் பதில்- ஆறு மாதத்தில் 18 நாட்கள்.

கலந்துரையாடலில்...



டிஸ்கவரி நகர்வு - திரைமொழி டாக்கீஸ் கவிக்கோ ஆவணப்பட திரையிடல் மற்றும் கலந்துரையாடல் நடத்தியபோது...



*VIT* வேந்தர் கோ விஸ்வநாதன் அவர்கள் அவர்கள் தலைமையில் உயர்நீதி மன்ற நீதியரசர் கே. என். பாஷா அவர்கள் வெளியிட இயக்குனர் லிங்குசாமி பெற்றுக் கொண்டார். முனைவர் பர்வீன் சுல்தானா, கவிஞர் மனஷ் புத்திரன், கவிக்கோவின் மருமகன் அயாஸ் பாஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

---



எழுத்தாளர் இந்திரன் - எல்லாவற்றையும் கவிதையாக மாற்றியவர்தான் கவிக்கோ அவர்கள். அவரைப் பற்றிய நிறைய தகவல்கள் அடங்கிய பெட்டகமாக இந்த ஆவணப் படம் இருக்கிறது.



இயக்குனர் சீனு ராமசாமி - ஒரு பெரும் கவிஞரைப்பற்றி கவிஞராக இருக்கும் இயக்குநர் பிருந்தாசாரதி இயக்கியது பொருத்தமாக உள்ளது. இந்த கவிக்கோ ஆவணப்படம் எல்லா பள்ளி, கல்லூரிகளிலும் திரையிடப்பட வேண்டும்.

கவிஞர் இளங்கோ கிருஷ்ணன் - தத்துவத்தை கவிதையாக மாற்றியவர் கவிக்கோ அப்துல் ரகுமான் இந்த ஆவணப்படத்தை நேர்த்தியாக இயக்கியிருக்கிறார் இயக்குநர் பிருந்தா சாரதி.

"கவிஞர்களின் கவிஞர் கவிக்கோ" ஆவணப் படம் அன்மையில் சென்னையில் கவிக்கோ மன்றத்தில் வெளியிடப்பட்டபோது,



வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் விசுவநாதன் - ''கவிக்கோ அவர்கள் பாண்டிய நாட்டிலிருந்து தொண்டை நாட்டிற்க்கு கிடைத்த தமிழ்க்கொடை. மதுரையிலே அவர் பிறந்திருந்தாலும் தொண்டை நாட்டில் (வேலூர் மாவட்டம்) தான் பணி புரிந்தார், தமிழ்ப்பணி ஆற்றினார். அவருடைய கவிதைகள் பேசாத பொருள் இல்லை. அரசாட்சி, நிர்வாகம், போன்ற கூறுகளில் அவர் எழுதிய கவிதை வரிகள் இன்றைய அரசியல் அவலங்களை அங்ககத் தொனியோடு அமைந்திருக்கின்றன.

அவரின் கவிதை தத்துவங்கள் இன்றைய தலைமுறைக்கு மட்டுமல்ல எதிர்காலத் தலைமுறைக்கும் பயன்படக் கூடியவை" என்றார்.



நீதியரசர் K.N.பாஷா - திரைத்துறையில் இருந்தால்தான் கவிஞர்களுக்கு பெயரும் புகழும் கிடைக்கும் என்ற நிலையில், கவிக்கோ அவர்கள் திரைத் துறையையே எட்டிப் பார்க்காமல் திரைப்பாடல்கள் எதுவும் எழுதாமல் உலகெங்கும் தனது கவிதைகளுக் கென்று பெரும் செல்வாக்கையும் தனிச் சிறப்பையும் பெற்றவர்.

இயக்குனர் லிங்குசாமி - "சுவிக்கோவின் கவிதைகளை நாங்கள் காலந்தோறும் இசைத்துக் கொண்டி ருக்கிறோம். எனக்கும், என் நண்பர்களுக்கும் கவிக்கோவின் பனையூர் இல்ல சந்திப்புகள் ஒரு பொற்காலம்.

ஹைக்கூ என்ற வடிவத்தையே தமிழில் முதன் முதலில் அறிமுகப் படுத்தியவர் கவிக்கோதான். அதனால் தான் கவிக்கோ பெயரில் ஆண்டுதோறும் ஹைக்கூ



கவிதைப்போட்டியை கவிக்கோ பெயரில் நடத்திவருகின்றோம்.

கவிஞானியாக வாழ்ந்த கவிக்கோவுக்கு இந்த ஆவணப் படம் மிக நெருக்கமாக அமைந்திருந்தது.



பேரா. பர்வீன் சுல்தானா - கவிக்கோ அவர்கள் எந்த கூட்டிலும் அடைபடாத வானம்பாடியாக,

எல்லோருக்குமான கவிஞராக வாழ்ந்தார். தனது கவிதைகள் மூலம் பல ஆயிரம் தமிழ் இளைஞர்களை கவிஞர்களாக மாற்றிக்காட்டினார். அதனால்தான் அவர் கவிஞர்களின் கவிஞராக வாழ்ந்து வருகிறார்.

புத்தனின் பல்லை காப்பாற்றுவது போல் கவிக்கோவின் சொல்லையும் நாம் காப்பாற்ற



வேண்டும்.

கவிஞர் மனுஷ்யபுத்திரன் - கவிக்கோ ஆவணப்படத்தில் இசை, ஒளிப்பதிவு, போன்றவைகள் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கிறது. மூன்று தலைமுறைகள் கவிக்கோவி னால் பாதிக்கப்பட்டு ஒரு கவிதை பாரம்பரியமே உருவாகி விட்டது. கஸல் கவிதைகளையும் சூஃபி தத்துவங்களையும் கவிதை களாகத் தந்தவர் கவிக்கோ.

வாழ்நாள் முழுவதும் விருதுகளுக் கும் பரிசுகளுக்கும்! அலைந்துக் கொண்டிருக்கும் கவிஞர் களை போலல்லாமல் தனக்கென்று ஒரு ராஜபாட்டையில் நடந்து தமிழகத்தில் அடுத்த ஒரு கவிதைத் தலைமுறையை உருவாக்கிய வர் கவிக்கோ. மானுடப் பொதுமையை நெஞ்சில் தாங்கி அவர் உருவாக்கிய அறம், அன்பின் வெளிச்சம், கவிதை ஆளுமைகள் இதுபோன்ற ஆவணப் படங்களால் காலந்தோறும் கொண்டு செல்லப்படவேண்டும்.

இந்த "கவிக்கோ" ஆவணப் படம் சுவாரசியமாக சொல்லப்பட்டு இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், இது ஒரு முன்னுதார ஆவணப் படமாக இருக்கிறது.

மேலும்:

கவிதை உறவு இலக்கிய அமைப்பு நடத்திய கவிக்கோ ஆவணப்பட திரையிடலின் போது,



கவிதை உறவு இலக்கிய அமைப்பு நடத்திய கவிக்கோ ஆவணப்பட திரையிடலின் போது, டாக்டர் நல்லி குப்புசாமி, கலைமாமணி ஏர்வாடி ராதாகிருஷ்ணன், தயாரிப்பாளர் சிங்கப்பூர் முஸ்தபா. இயக்குநர் பிருந்தா சாரதி, கவிஞர் மு. முருகேஷ், இசையமைப்பாளர் தாஜ்நூர்.



தொழில் அதிபர் நல்லி குப்புசாமி - தன்னிகரில்லாத கவிஞராக விளங்கியது மட்டு மல்லாமல் எல்லோரையும் அரவணைத்து, எல்லோரையும் எழுத வைத்தவர் கவிக்கோ அப்துல் ரகுமான். அனைத்து மதங்களும், செல்லும் பாதையும் இறைவனை நோக்கியே என்பதை படைப்புகளில் வலியுறுத்திய வர் மட்டும் அல்ல ... வாழ்விலும் கடைபிடித்தவர் அவர். அவருடைய கவிதைகள் எல்லா காலங்களுக்கும் பொருந்தக் கூடியவை.



கலைமாமணி ஏர்வாடி இராதாகிருஷ்ணன் - தமிழின் மகத்தான கவிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களுடைய பால் வீதி, ஆலாபனை, பித்தன், சுட்டு விரல் ஆகியவை தமிழ் இலக்கியத்தில் தடம் பதித்தவை. அதேபோல, அவர் உருவாக்கிய கவிஞர்களும் தமிழ் இலக்கியத்தில் தடம் பதித்து வருகிறார்கள். கவிக்கோவின் வாழ்வு, இலக்கியப் பணி ஆகியவற்றை ஒரு திரைப்படம் போல் சுவாரசியமாக இந்த ஆவணப் படத்தை உருவாக்கி இருக்கிறார் இயக்குநர் பிருந்தா சாரதி.

திரை மொழி
TALKIES
Thiraimozhi Talkies

## பிருந்தா சாரதி படைப்புகள்



Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**